அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 34/2025

எனது இலக்கம் : EST-1/MISCL/06/0032(II)

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.12.30

அமைச்சுச் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**2026 ஆம் ஆண்டு – கடமை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்**

2026 புத்தாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் 2025 ஆம் ஆண்டின் அரை இறுதியில் இலங்கை முகங்கொடுத்த “திட்வா” சூறாவளி நிலைமை காரணமாக தோன்றிய பாரிய அனர்த்த நிலைமைகள் காரணமாக நாட்டில் ஏற்பட்ட அழிவுடன் கூடிய நிலைமையின் போது அரச சேவைகளைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கும் நாட்டு மக்களின் வழமையான வாழ்க்கையினை சீரான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கும் அரச உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புடனான செயலூக்கமான சேவை மிகவும் பாராட்டத்தக்கது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. மேற்படி அழிவுடன் கூடிய நிலைமை காரணமாக அரச உத்தியோகத்தர்கள் என்ற வகையில் நாம் முகங்கொடுக்கும் பிரதான சவால்கள் இரண்டாகும். ஒருபுறம் பின் தள்ளப்பட்ட மக்களின் வாழ்க்கை மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை மீண்டும் சீரான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன், மறுபுறம் மேற்படி சீராக்கும் நடவடிக்கைளுக்காக ஈடுபடுத்தப்படும் நிதி சார் ஒதுக்கீடுகள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றை சிறந்த முகாமைத்துவத்துடனும் மிகவும் பயனுறுதியுள்ள வகையிலும் ஈடுபடுத்தி நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

03. மேற்படி சவால்களுக்கு முகங்கொடுத்தவாறு முன்னேறிப் பயணிக்கும் இந்தக் காலப்பகுதியில் பொதுமக்கள் சேவை வழங்குவதன் வினைத்திறனினை உறுதிப்படுத்தும் ஒருமைப்பாட்டுடனான அரச சேவை ஒன்றிற்காக அரச உத்தியோகத்தர்கள் என்ற வகையில் நாம் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதனை முன்னணிப் பணி ஒன்றாகக் கருதுதல் வேண்டும் என்பதுடன் அதற்கு அவசியமான ஊக்குவிப்பினையும் மற்றும் அர்ப்பணிப்பினையும் 2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே சகல அரச உத்தியோகத்தர்களின் மனதிலும் தோற்றுவித்தல் மிகவும் பிரதான விடயம் ஒன்றாகும் என்பதனை வலியுருத்துகின்றேன்.

04. 2026 ஆம் ஆண்டின் கடமைகள் ஆரம்பிக்கப்படும் முதல் நாளாகிய சனவரி மாதம் 01 ஆம் திகதியாகிய வியாழக்கிழமை சகல அரச ஊழியர்களினதும் பங்குபற்றலுடன் தமது சேவை நிலையங்களில் கடமை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ வைபவத்தினை நடாத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கு வினைத்திறனுடைய மற்றும் பயனுறுதியுள்ள அரச சேவை ஒன்றினை வழங்குவதற்காக ஒட்டுமொத்த அரச சேவையும் அதற்காக திடசங்கட்பத்துடன் அர்ப்பணிக்க வேண்டியுள்ளமையினால் குறித்த தினத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில்

நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தினைப் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

I. தேசியக் கொடியினை ஏற்றுதல் மற்றும் தேசிய கீதம் இசைத்தல்.

II. முப்படைகளின் உறுப்பினர்கள் உட்பட நாட்டிற்காக தமது உயிர்களை அர்ப்பணித்த சகலரையும் நினைவுகூறுவதற்காக இரண்டு நிமிட (02) மௌன அஞ்சலி செலுத்துதல்.

III. சகல பதவியணி உறுப்பினர்களும் தமக்கு இலகுவான மொழியில் தமது சேவை நிலையங்களில் இருந்தவாறு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரச சேவை உறுதிமொழி / சத்தியப்பிரமாணத்தினை சத்தமாக மொழிதல்.

IV. தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்காக அறிமுகம் செய்யப்பட்டு உள்ள அரச கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் குறித்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக அரச ஊழியரின் பங்களிப்பு தொடர்பாகவும் அவர்களை ஊக்குவித்து குறுகிய சொற்பொழிவு ஒன்றினை நடாத்துதல்.

05. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம் /எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக ,மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் : ade-i@pubad.gov.lk

பிரதிகள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | கௌரவ மாகாண ஆளுநர்கள் | - | தகவல்களுக்காக |
| 2. | ஜனாதிபதியின் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 3. | பிரதமரின் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 4. | அமைச்சரவைச் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 5. | கணக்காளர் நாயகம் | - | நடவடிக்கைகளுக்காக |

# அரச சேவை உறுதியுரை / சத்தியப் பிரமாணம்

இரண்டாயிரத்து இருபத்தி ஆறாம் ஆண்டின் கடமைகளை ஆரம்பிக்கும் முதல் நாளாகிய இன்று, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, முழு நாட்டு மக்களினதும்

அபிலாஷைகளை முன்னணியாகக் கொண்ட இலக்குகளை நனவாக்கும்

சுபீட்சம் மிகு புத்தாண்டின் தொடக்கத்தினை, இவ்வாறு தடம் பதிக்கின்றது.

இன்றுடன் ஆரம்பிக்கப்படும் புத்தாண்டில்

ஒரே கொடியின் கீழ் நிழல் பெறும் ஒரே நாடாகவும் ஒரே தேசமாகவும்

கம்பீரமாக எழுந்து நிற்பதற்கும்

குறிக்கோளினால் ஈர்க்கப்பட்ட மக்களின் அபிமானத்தை

எடுத்துரைக்கவும் மற்றும் அவ்வாறே

“வளமான நாடு அழகான வாழ்க்கை” ஊடாக

சவால்களின் முன்னிலையில் தயங்கமாட்டோம் எனும் தொனிப்பொருளின்

சாரத்தை அதனூடாக எடுத்துக்காட்டவும்

வழிகாட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட அரச நிருவாகம் ஒன்றின்

பங்காளர் ஒருவர் என்ற வகையில்

நான்,

பொதுமக்களின் பணத்திலிருந்து சம்பளம் பெறும் அரச ஊழியர் ஒருவர் என்ற வகையில் அரச கொள்கைகள் மற்றும் இலக்குகளை நடைமுறைப்படுத்தும் போது

என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பினை

வினைத்திறனுடனும்,

பயனுறுதியுடனும்,

செயலூக்கத்துடனும்,

அதிகூடிய அர்ப்பணிப்புடனும்,

நேர்மையுடனும்,

பொதுமக்களுக்கு சார்பாகவும்,

முழு நிறைவாக நிறைவேற்றுவதாக உறுதி மொழிகின்றேன். / சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.